2021 பிப்ரவரி 5]

Bannariamman Handloom Silk Dyeing and Weaving Association–ன் *வேண்டுகோள் நிறைவேற்றித் தரப்படும். அதற்கான பணிகள், முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, விரைந்து செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. நாராயணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

கால்நடை மருத்துவமனை

***72622—திரு. வெ. நாராயணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், வடுகச்சிமதில் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், வடுகச்சிமதில் ஊராட்சியில் மாட்டினங்கள் 724 அலகுகளும், ஆட்டினங்கள் 66 அலகுகளும் மற்றும் கோழியினங்கள் 23 அலகுகளும் என அனைத்து அலகுகளையும் சேர்த்து 813 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தபட்சம் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வடுகச்சிமதில் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. நாராயணன் அவர்கள்.

திரு. வெ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையில் துயில் கொண்டிருக்கின்ற எம் தலைவன் புரட்சித் தலைவன் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருநாமத்தைப் பற்றியும், தமிழகத்தில் தன்னிகரில்லா தலைவியாக விளங்கி, கருவில் இருக்கின்ற குழந்தை முதல் கல்லறைக்குப் போய்ச் சேருகின்றவர் வரை என அனைவருக்கும் நலத் திட்டங்களைக் கொண்டு வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன்.

நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், வடுகச்சிமதில் கிராமம் விவசாய பெருமக்களும், கால்நடை வளர்ப்பவர்களும் அதிகமாக வசிக்கின்ற பகுதியாகும். அப்பகுதியைச் சுற்றி கிட்டத்தட்ட 18 கிராமங்கள் இருக்கின்றன. அனைத்துக் கிராமங்களிலும் உள்ள கால்நடை வளர்ப்பவர்களின் வசதிக்காக புதிய கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, வடுகச்சிமதில் கிராமத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் செங்களாங்குறிச்சி கால்நடை மருந்தகமும், 3 கி.மீ. தொலைவில் ஏர்வாடி கால்நடை மருந்தகமும் மற்றும் 5 கி.மீ. தொலைவில் களக்காடு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியைப் பொறுத்தவரை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரசாணை எண் 167, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 15–11–2019–ன்படி ரூபாய் 3 இலட்சத்து 73 ஆயிரம் செலவில் காரியாண்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் புதியதாக

2021 பிப்ரவரி 5]

தோற்றுவிக்க அரசாணை வெளியிடப்பட்டு, அந்தக் கால்நடைக் கிளை நிலையம் தற்போது செயல்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 25 கால்நடைக் கிளை நிலையங்களையும், 40 கால்நடை மருந்தகங்களையும், 5 கால்நடை மருத்துவமனைகளையும் கொடுத்தார்கள். அதிலே சிறப்பு ஒதுக்கீடாக நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில் ரூபாய் 56 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கால்நடை மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது என்கின்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற அனைத்துக் கிராமங்களுக்கும் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக இன்றைக்கு செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. நாராயணன் அவர்கள்.

திரு. வெ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்".
நல்லதொரு தூய்மையான ஆட்சிக்கு சான்றாக விளங்குவது மழை.
"மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும்".

என்று வள்ளுவன் சொல்கின்றான். இங்கே நடக்கின்ற ஆட்சி தர்மத்தின் ஆட்சி. இந்த தர்மத்தின் ஆட்சியை நடத்துகின்றவர் யார்? அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை, தாயைக் காத்த தனயனாக இருந்து, இந்த நான்கு ஆண்டுகள் செயலாற்றியுள்ளார்கள். இந்த ஆட்சி நாளை கவிழ்ந்துவிடும்; நாளை மறுநாள் கவிழ்ந்துவிடும் என்று எண்ணியவர்கள் மத்தியில் ஓர் அற்புதமான ஆட்சியை

நடத்தி காட்டியுள்ளார்கள். தமிழகத்திலே குடிநீர் பற்றாக்குறை இல்லை; விவசாயப் பெருமக்களின் விவசாய நிலங்களெல்லாம் வாடிக் கிடக்கின்றன என்ற நிலை இல்லாமல், எங்கு பார்த்தாலும் ஒரு நிறைமாத கர்ப்பிணியைப்போல் வயல்வெளிகளிலெல்லாம் நெற்கதிர்கள் விளைந்து,சாய்ந்து தொங்குகின்றன.இந்தக் காட்சியைப் பார்க்கும்போது, இந்த ஆட்சி இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்ட ஓர் ஆட்சி என்பது தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். தன் வாழ்நாளில் ஏழைகளுக்காக வாழ்ந்து மறையும்பொழுதும் முதலமைச்சராகவே மறைந்தார். இது காலத்தின் வரலாறு. அதைப்போல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவிய ஏழைப் பங்காளன், எளியவர், ஏழை மக்களுக்காக தன்னுடைய சொத்துக்களையெல்லாம் கொடுத்து, இந்த மண்ணுலகத்தை விட்டு மறையும்போது முதல்வராகவே வாழ்ந்து, முதல்வராகவே மறைந்தார். இது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு பகுதி. இரண்டாவதாக தலைவன் இறந்த பின்பு, தலைமைப் பொறுப்பை ஏற்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் முதல்வராகவே மறைந்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வெ. நாராயணன்: ஒரே ஒரு நிமிடம். அப்படிப்பட்ட ஆசிர்வதிக்கப்பட்ட ஓர் இயக்கம்; கொடுத்துக் கொண்டேயிருக்கின்ற ஓர் இயக்கம்; இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, நல்லதொரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற அன்பு அண்ணன், பாசத்திற்குரிய அண்ணன், குடிமராமத்து நாயகன், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆசிர்வாதத்துடனும், அண்ணன் துணை முதலமைச்சர் அவர்களுடைய ஆசிர்வாதத்துடனும், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியிலே, நாங்குநேரியைத் தலைமையிடமாகக் கொண்டு தலைமை கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு பரிந்துரை செய்து அதற்கு உத்தரவு பிறப்பித்த எங்கள் பாசத்திற்குரிய அண்ணன் அமைச்சர் மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு அரசாணை வழங்க உத்தரவிட்ட தமிழகத்தினுடைய நல்லாட்சி நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர்

2021 பிப்ரவரி 5]

அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, வணங்கி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் தலைமையில் அமைந்த அம்மா அவர்களின் அரசு மக்களுக்காக மட்டுமல்ல; மக்கள் எண்ண உணர்வோடு, மனிதநேயம் கொண்டு, கால்நடைகளுக்காகவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. வெளிநாடு பயணம் என்பது சுற்றுப்பயணத்திற்காக அல்ல; தமிழகத்தின் சாதனைக்காக என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. மிகப் பெரிய கால்நடை பூங்காவை ஏற்படுத்தி வரலாற்றிலே முத்திரை பதித்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை மாவட்ட நிருவாகத்தாலும், மதுரை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையினாலும் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புக்குரிய ஜல்லிக்கட்டை முன்னோடியாகத் தமிழகத்தில் தொடங்கி வைத்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உற்ற துணையாக இருந்து அதற்குப் புகழ் சேர்த்திட்ட போற்றுதலுக்குரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறையால் பல்வேறு இடங்களில் மருந்தகங்கள் உரிய வகையில் திறக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், மதுரை மாவட்டம், வடக்குத் தொகுதியிலே மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மருந்தகம் அமைப்பதற்கான அனுமதியினை செல்லூர் பகுதியிலே வழங்கியிருந்தாலும், உரிய இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு அலுவலர்களும், எங்களைப் போன்ற பொது பணியாற்றுபவர்களும் காலம் தாழ்த்தும் நிலை இருக்கிறது. மாநகராட்சிப் பகுதியாக, நெருக்கடியான பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அதற்குத் தகுதியான இடம் தேர்வு செய்ய முடியாமல் இருக்கிறது. அரசு முன்வந்தும்கூட இடத்தைத் தேர்வு செய்கின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலையிலே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், செல்லூர் பகுதியிலே நடமாடும் கால்நடை மருந்தகத்தை

அமைத்துக் கொடுக்க, முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வடக்குத் தொகுதி, செல்லூர் பகுதியிலே கால்நடை மருந்தகம் அமைக்க இடம் தேர்வு செய்வதிலே தாமதமாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே, உடனடியாக துறை அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, அது குறித்து ஆய்வு செய்யப்படும். இன்றைக்கு இந்தியாவிலேயே நடமாடும் கால்நடை மருந்தகமாக Amma Ambulance திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் துவக்கி வைத்து, இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடமாடும் கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடமாடும் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்கின்ற நல்ல செய்தியை இந்த வேளையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, செல்லூர் பகுதியிலே அமையவிருக்கின்ற கால்நடை மருந்தகத்திற்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்வதற்கு இன்றைக்கே துறை அதிகாரிகளை அனுப்பி வைத்து, அங்கே இருக்கின்ற மாநகராட்சி ஆணையரோடு கலந்து பேசி, அந்த மருந்தகமும் அங்கே அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்கிற நல்ல செய்தியையும் இந்த வேளையிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய

2021 பிப்ரவரி 5]

பொன்னடிகளை வணங்குகிறேன். அம்மா அவர்களுடைய நல்லாசியோடு இன்று தமிழகத்தை நல்வழியிலே நடத்திச் செல்கின்ற மாட்சிமைப் பொருந்திய தமிழகத்தினுடைய முதலமைச்சர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர், எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற எங்கள் பாசத்திற்குரிய அருமை அண்ணன், தமிழகத்தினுடைய 8 கோடி மக்களுடைய நலனுக்காக அம்மா அவர்களின் வழியிலே அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற உத்தமத் தலைவன், தமிழ்த் தாயின் தங்க மகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அதே வழியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எஃகுக் கோட்டையினுடைய இரும்பு மனிதராக, அமைதியின் வடிவமாக, ஆர்ப்பாட்டமில்லாமல், அமைதியான புன்முறுவலோடு எங்களை வழி நடத்திச் செல்கின்ற எங்கள் போர்ப் படைத் தளபதி, தமிழகத்தினுடைய மாட்சிமைப் பொருந்திய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் O.P.S. அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற செய்யாறு தொகுதி, செய்யாறு ஒன்றியம், ஏனாதவாடி கிராமம் மிகப் பெரிய கிராமம். சுமார் 5,000 கால்நடைகள் இருக்கின்ற அந்த கிராமத்திற்கு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று விரும்புகிறேன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் நான் கேட்டதையெல்லாம் கொடுத்திருக்கிறார். கூடுதலாக, இதை சிறப்புக் கவனம் செலுத்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், சுற்றியிருக்கின்ற பகுதிகளில் இருக்கின்ற கால்நடைகள் சிகிச்சைக்காக அங்கு வந்து செல்வதற்கு ஏதுவாக மைய இடமாக அந்தக் கிராமம் இருக்கின்ற காரணத்தினாலே, ஏனாதவாடி கிராமத்திலே கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவதற்கு, இன்று ஆர்ப்பாட்டமில்லாமல், ஆரவாரமில்லாமல், யார் எதைக் கேட்கிறார்களோ, அதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2021 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏனாதவாடி கிராமத்திற்கு சிறப்புக் கவனம் செலுத்தி அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதற்கு சிறப்புக் கவனம் செலுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஏனாதவாடி கிராமத்திற்கு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

சிறப்புப் பயிற்சி மையங்கள்

***56146—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துவங்குவதற்காக சிறப்புப் பயிற்சி மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி முதற்கண் பணிந்து வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்வழியில் வெற்றிநடை போடும் தமிழகத்தை தலைமையேற்று நடத்திவரும் சாமானிய முதல்வர், வெற்றிடம் என்று சொன்னவர்களுக்கு மத்தியில், தனது நிருவாகத் திறமையினால் 'வெற்றி இடமாக'*